பொது சன நூலகம்
மாநகராட்சி மன்றம்
10-5-1993
யாழ்ப்பாணம்

ஹேமாவின் தலைமையை ஐ.தே.க. புறக்கணிக்கும்?

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 27 இதழ் 84
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 10 — 05 — 1993

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவி திருமதி ஹேமாவின் தலைமையை ஐ.தே.கவினர் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

1994ல் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே.க. சார்பில் குதிக்க முயலும்

(2-ம் பக்கம் பார்க்க)

வவுனியா வந்த தமிழர் கொழும்பு திரும்பினர்

(வவுனியா)

இலங்கை ஜனாதிபதியின் கொலைச் சம்பவத்தையடுத்து அச்சம் காரணமாக வவுனியா வந்து அகதி முகாமிலும் தனியார் வீடுகளிலும் தங்கியிருந்த தமிழர் பலர் மீண்டும்

(2-ம் பக்கம் பார்க்க)

பிரேமா — லலித் கொலை கட்சி உட்பூசல் காரணம்?

(கொழும்பு)

லலித் அத்துலத் முதலியின் கொலையை உற்றுநோக்கினால் இதனை விடுதலைப்புலிகள் செய்ததாகத் தெரியவில்லை என்று 'லைதிவ' பத்திரிகை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

(2-ம் பக்கம் பார்க்க)

● வடக்கு - கிழக்கில்

இராணுவத் தாக்குதல் குறித்து முக்கிய மாநாடு கூடுகிறது

இராணுவ அழுத்தம் கூடலாம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதியில், அடுத்து மேற்கொள்ளப்படவேண்டிய இராணுவ நடவடிக்கை குறித்து அடுத்த சில தினங்களில் கொழும்பில் முக்கிய மாநாடு ஒன்று கூட்டப்படவிருப்பதாக இராணுவ வட்டாரங்களில் இருந்து தெரியவருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு அமைச்சராகவும், முப்படைகளின் தளபதியாகவும் செயற்படும் புதிய ஜனாதிபதி, இம்மாநாட்டில் முப்படைகளின் தளபதிகள் கொடுக்கும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கவேண்டி இருக்கும். எனினும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராக இருந்த காலத்தில் கடுமை

(2-ம் பக்கம் பார்க்க)

பிரேமா கொலையில் புலிகளை குற்றம்சாட்ட ஜனாதிபதி மறுப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலைக்கு விடுதலைப்புலிகளே காரணமென நேரடியாக குற்றம் சாட்ட புதிய ஜனாதிபதி திரு. விஜயதுங்கா மறுத்துள்ளார்.

விசாரணைகள் முடிய முன்னர் விடுதலைப் புலிகள்தான் காரணமென எப்படிக்கூறமுடி

(2-ம் பக்கம் பார்க்க

★ பூநகரிப் பாதை விவகாரம்:

ஜனாதிபதியுடன் பேசிய பின்பே யு. என். எச். சி. ஆர். அதிகாரி வருவார்

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பாதையைத் திறப்பது தொடர்பாக, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துமுகமாக யாழ்ப்பாணம் வரவிருந்த அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதி பீற்றர் நிக்கிலிசின் யாழ்ப்பாண வருகை தாமதமாகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கவுடன் இது

(2-ம் பக்கம் பார்க்க)

★ பிரேமா, லலித்

கொலையாளிகள் இனம் காணப்பட்டனர்?

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவையும் டி.யு.என்.எவ். தலைவர் திரு. லலித் அத்துலத் முதலியையும் கொன்றவர்கள் இனம் காணப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு நிலையம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த குலவீரசிங்கம் வீரகுமார் என்பவரே பிரேமதாசாவை கொன்றவர் என்றும் 23 வயதான இந்த இளைஞர் சுகஸ்திதவிற்கு அருகில் ஒரு கடையில் வேலைக்கு

(2-ம் பக்கம் பார்க்க)

மூன்று வாரத்தில் லலித் கொலை அறிக்கை

(லண்டன்)

டி. யு. என். எவ். தலைவர் திரு. லலித் அத்துலத் முதலியின் கொலை குறித்து தமது விசாரணை அறிக்கையை ஸ்கொட்லண்ட்யாட் அடுத்த மூன்று வாரத்தில் இலங்கை பொலிஸாரிடம் கையளிக்கவுள்ளது.

(2-ம் பக்கம் பார்க்க)

பிரேமா கொலை பற்றிய வீடியோ படம் ரூபவாஹினி ஒளிபரப்பவில்லை

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா கொலையுண்ட நேரத்தில் எடுக்கப்பட்ட வீடியோப் படத்தை 'ரூபவாஹினி' ஒளிபரப்பவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஒளிபரப்பு நாடா ரூபவாஹினியிடம் உள்ளது என்றும் ஏன் அதை ஒளிபரப்பாது இருக்கின்றார்கள் என்று தெரியவில்லை எனவும் கேள்வி எழுந்துள்ளது. (சு.கி)

ஜனாதிபதிக்கு ஆதரவு தமிழ்க் குழுக்கள் வழங்கும்

(கொழும்பு)

வடக்கு கிழக்குப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு புதிய ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவிற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக கொழும்பிலிருந்து இயங்கும் தமிழ் குழுக்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பிலுள்ள தமிழ் குழுக்கள் புதிய ஜனாதிபதிக்கு தமது வாழ்த்துக்

(2-ம் பக்கம் பார்க்க)

இருவருக்கு நேற்று மரணதண்டனை

(யாழ்ப்பாணம்)

கொலைக் குற்றம் சாட்டப்பட்ட இருவருக்கு விடுதலைப் புலிகளால் நேற்று மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

நேற்றுக் காலை தாவடிச்சந்தியில் வைத்து சிவகுருநாதன் குகனேசனுக்கும் கோண்டாவில் சந்தியில் வைத்து நடராசா தயானந்தனுக்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

கனடாவில் மீண்டும் மோதல்; அராலி இளைஞர் சுட்டுக்கொலை

(ரொறன்ரோ)

கனடாவில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கோஷ்டி மோதல் ஒன்றில், இலங்கைத் தமிழரான அராலியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ரொறன்ரோ நகரில் இடம்பெற்ற விருந்தொன்றில், இலங்கைத் தமிழர்களான இரண்டு கோஷ்டிகளிடையே இடம்பெற்ற கடும் மோதலின்போதே, அராலி மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சிட்டிபாபு எனப்படும் 27 வயதான நமசிவாயம் சிவப்பிரகாசம் என்ற இளைஞரே சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதற்கிடையில், கனடாவில் தமிழர்களிடையே இடம்பெற்று வரும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை நிறுத்துவதற்கு, அங்குள்ள இலங்கைத் தமிழர்கள் உதவவேண்டும் எனக் கனேடியக் காவல்

(2ம் பக்கம் பார்க்க)

தமிழ் இளைஞர் சுவிஸில் கொலை

(சூரிச்)

சுவிஸைச் சேர்ந்த சூரிச் நகரில் இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதப் பிற்பகுதியில், புங்குடுதீவு 11ம் வட்டா

(2ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU-KOLA Capsules கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சி-4072]

ஆங்கில கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். 204, மானிப்பாய் ரோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (சி-86)

வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலைவிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி இ. இராசரத்தினம்121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-7)

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

பிரயோக கணிதம்

நிலையியல் பகுதி I. (2) காலியும் அதன் பிரயோகங்களும் (3) மாதிரி வினாத்தாள்களும், விடைகளும் ஆகிய நூல்கள் யாழ். நகரெங்கும் விற்பனையாகின்றன. ஆசிரியர் சி துரையப்பா B Sc (Spl.), M. Sc (Agric), MAES (Sri Lanka) (சி-84)

கனடாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துறையினர் கேட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை ரொரன்ரோவில் உள்ள இலங்கைத் தமிழரை அழைத்து, காவல்துறையினர் கூட்டம் ஒன்றை நடத்தினர். கோஷ்டி மோதலில் ஈடுபடும் ஆயுததாரிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைய ஒத்துழைக்குமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். (சி)

நெருப்புக்காய்ச்சல் நோய் தீவிரமாக பரவுகிறது!

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவும் கடும்வெப்பம், சீரற்ற கால நிலைகளால் நெருப்புக்காய்ச்சல் நோய் தீவிரமாகப் பரவுவதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதிக வெப்பம், நீர்நிலைகள் அசுத்தமடைந்திருத்தல் போன்றவை காரணமாகவே நெருப்புக்காய்ச்சல் பரவுவதா

(3-ம் பக்கம் பார்க்க)

தேவை

பத்திரிகைக் காரியாலயத்தில் விளம்பரம், கணக்கு, விநியோகம் ஆகிய பகுதிகளில் பொறுப்புடன் கடமையாற்றத் தகுதியும் அனுபவமும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்: க. பொ. த. உயர்தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
வயது: 21—35 வரை.
விண்ணப்ப முடிவு திகதி: 14-5-93.

விண்ணப்பிக்கவும்:
விளம்பர இல:- A 3113
மே/பா. ஈழநாடு
யாழ்ப்பாணம்.

(எ- 3113)



1. ஐந்து வெற்றுப்போத்தல்கள் [ஜாம் அல்லது நெல்லிரசம்] கொடுத்து ரூபா 25 - பெறுவதுடன் அதிர்ஷ்ட சீட்டை பெற்றுக்கொள்ளவும்.
2. மாத முடிவில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

1-ம் பரிசு — சுவர்க்கடிகாரம்
2-ம் பரிசு — எவர்சில்வர் வீட்டுப்பாவனைப் பொருட்கள்
3-ம் பரிசு — மாணவருக்கான பாடசாலை உபகரணங்கள்
மேலும் 10 ஆறுதல் பரிசுகள்

பின்வரும் இடங்களில் அதிர்ஷ்ட சீட்டைப் பெற்றுக்கொள்ளமுடியும்:

1. ரேஸ்ட்லைன் இன்டஸ்றீஸ் 14, சீனியர் வீதி, யாழ்ப்பாணம்.
2. அறிவகம் சாவகச்சேரி,
3. சுபாஸ் பேக் ஹவுஸ் நெல்லியடி,
4. சுந்தரம் அன் சன்ஸ் சுன்னாகம்
5. சித்திவிநாயகர் நூல் நிலையம் ஏழாலை மேற்கு, சுன்னாகம்
6. சவாறிஸ் சுண்டுக்குளி,

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(எ3084)

பிரேமா கொலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் எனவும் திரு. விஜயதுங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இக்கொலை குறித்து இலங்கைப் பொலிசாரும், பிரிட்டனின் 'ஸ்கொட் லண்ட்யாட்' புலனாய்வுத்துறையினரும் விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார். (சி)

பூநகரிப் பாதை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே. அவர் யாழ்ப்பாணம் வரவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, பூநகரி ஊடாக உணவுப்பொருட்கள் கொண்டு செல்வதற்கும், பொதுமக்கள் போக்குவரத்துக்குமான கண்காணிப்பை மேற்கொள்வதற்குத் தாம் தயாராக இருப்பதாக யு. என். எச். சி. ஆர். அதிகாரிகள் கூறியிருப்பதும் தெரிந்ததே. (க-சி)

தமிழ் இளைஞர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரத்தைச் சேர்ந்த 26 வயதான குமாரசாமி கிரிதரன் என்பவரே சூரிச் நகரில் கொலை செய்யப்பட்டவராவர். இவரது சடலத்தைக் கார் டிக்கி ஒன்றிலிருந்து சுவிஸ் பொலிஸார் மீட்டுள்ளனர் இக்கொலை தொடர்பாக மூன்று இலங்கைத் தமிழர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதையடுத்து, சுவிஸில் உள்ள இலங்கைத் தமிழர்கள் மீது, பொலிஸார் தீவிர கண்காணிப்பை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

பிரேமா, லலித்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமர்த்தப்பட்டிருந்தவராம்.

யாழ்ப்பாணம் - சாவகச்சேரியைச் சேர்ந்த கந்தையா ரகுநாதன் என்பவர் திரு. லலித் அத்துலத்முதலியை கொன்றவர் என அடையாளம் காணப்பட்டுள்ளனராம் இவர்கள் இருவரும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களாம்.

இவர்களது நண்பர்களையும் இவர்கள் அடிக்கடி சென்று வந்த இடங்களையும் நிச்சயிப்பதற்கென பொலிஸ் விசாரணைகள் தொடர்ந்தும் நடைபெற்றுவருகின்றன, எனவும் குற்றப் புலனாய்வுப் பொலிஸ் அதிகாரி பயனல் குணதிலக தெரிவித்துள்ளார். (சி)

இராசி பலன்

10-05-1993
திங்கட்கிழமை
(தமிழுக்கு சித்திரை 27)

பஞ்சமி முழுவதும், பூராடம் முழுவதும் சித்தயோகம் இராகுகாலம் காலை 7-24 முதல் 8-54 வரை, சுபநேரம் காலை 11-54 முதல் 1-24 வரை.

மேடம்: உடல் உபாதை, பண நஷ்டம், வீண் பயம்.
இடபம்: தொழில் போட்டி, அதிபர் நேசம், மனசஞ்சலம்.
மிதுனம்: இனசன மதிப்பு, நற்பெயர், தெய்வநம்பிக்கை.
கடகம்: நோய் தணியும், பணவரவு, அநாகரிக செயல்.
சிம்மம்: காரியதடை, மன சஞ்சலம், அமைதிக் குறைவு.
கன்னி: நம்பிக்கை மோசம் தகாத நட்பு, வெறுப்பு.
துலாம்: கல்வியால் சிறப்பு, மன உற்சாகம், துணிச்சல்.
விருச்சிகம்! கெட்ட கனவு, பயண ஏமாற்றம், அலைச்சல்.
தனுசு: எதிர்பார்த்த சந்திப்பு, ஆசாரக் குறைவு, பண வரவு.
மகரம்: குறை காணுதல், கீழ்ப்படிவு, மனவிரக்தி.
கும்பம்: சுபகாரியம், உறவினர் வருகை, சகோதர உதவி.
மீனம்: காரிய அனுகூலம். வெளியார் சந்திப்பு, புகழ்.

— ஜோஸ்யர்

வவுனியா வந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புக்கு பயணமாகியுள்ளனராம்.

இதேவேளை ஹெந்தலை - வத்தளை உட்பட தமிழ் பகுதிகளில் பலத்த பாதுகாப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தமிழ் மக்களின் அச்சம் ஓரளவு குறைந்துள்ளதாகவும் கொழும்பிலிருந்து வந்த ஒருவர் தெரிவித்தார். (59-சி)

ஜனாதிபதிக்கு ஆதரவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களைத் தெரிவித்து வடக்கு - கிழக்கில் சமாதானமும், ஜனநாயகமும் நிலவ ஒரு தீர்வு காண்பதற்கான முயற்சியில் ஒத்துழைப்பை அளிப்பதாக உறுதியளித்துள்ளன.

இதேவேளை இனப்பிரச்னை தீர்வு விடயத்தில் புதிய ஜனாதிபதி மிகுந்த அக்கறையுடன் செயற்படுவாரென்று தமிழ் குழுக்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன. (ரி-சி)

ஹேமாவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி ஹேமாவின் எதிர்பார்ப்பு பெரும் தோல்வியடையலாமெனவும் இவரது செல்வாக்கு கட்சியில் எடுபடுமா என்பது சந்தேகம் எனவும் அவதானிகள் தெரிவித்தனர்.

இதேவேளை திருமதி ஹேமாவை தற்போதைய ஐ. தே. க தலைமை ஒதுக்கி விடக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (சி)

மூன்று வாரத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லலித் கொலை குறித்து துப்பு துலக்க வரவழைக்கப்பட்ட 'ஸ்கொட்லன்ட்யாட்' பொலிஸார் தமது விசாரணைகளை முடித்துக்கொண்டு கடந்த சில தினங்களுக்கு முன் பிரிட்டன் திரும்பினார்கள்.

இந்த விசாரணையில் லலித் கொலையாளிகள் யார் என்பது குறித்து விரிவான விபரம் கிடைக்கலாமென இலங்கை பொலிஸார் எதிர்பார்க்கின்றனராம். (சி)

பிரேமா, லலித் கொலை

(1ம் பக்கத் தொடர்ச்சி

அவர் மேலும் கூறியதாவது: லலித் கொலைக்கும் ஜனாதிபதி பிரேமதாசா கொலைக்கும் கட்சிகளிடையேயான உட்பூசல்கள் காரணமாயிருக்கலாமென சந்தேகிக்க வேண்டியிருக்கிறது

பிரேமதாஸாவை கொலை செய்தவர் என்று கூறப்படுபவர் சுச்சரித்த இல்லத்துக்கருகில் இரண்டு வருடங்களாக வசித்து வந்தவர் என்றால் இரகசியப் பொலிசாரும், ஜனாதிபதியின் பாதுகாப்பு, புலனாய்வுப் பிரிவினரும் என்ன செய்து கொண்டிருந்தார்கள் இதிலிருந்து இந்த இரண்டு கொலைகளும் அவர்களுக்கிடையில் நடந்துள்ளதா? என்று சந்தேகிக்க வேண்டியிருக்கின்றது என்றார். (சு - சி)

வடக்கு-கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யான முடிவு எதனையும் மேற்கொள்ளாத திரு. விஜயதுங்க எதிர்வரும் மாதங்களிலும் இராணுவ நடவடிக்கைக்கு பெருமளவு முக்கியத்துவம் கொடுப்பார் என்பது சந்தேகத்திற்கிடமானது என 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இருந்தபோதிலும், அடுத்து வரும் மாதங்களில் படைத்தளபதிகள் தமது அதிகாரத்தை பலப்படுத்தும் நோக்கில் இராணுவ நடவடிக்கைகளை அதிகரிக்கவும் அதன் மூலம் தாங்கள் அரசியலில் முக்கியமானதொரு இடத்தை பிடிக்கவும் முயலலாமென கொழும்புச் செய்தியாளர் ஒருவர் கூறியுள்ளார். (சி)

கொழும்பில் கலவரம் ஏற்பட்டிருந்தால்

புலிகளுக்கு சர்வதேச ஆதரவு பெருகியிருக்கும்

(கொழும்பு)

கொழும்பில் கலவரம் ஏற்பட்டிருந்தால் விடுதலைப்புலிகளுக்கு சர்வதேச ரீதியில் ஆதரவு பெருகியிருக்கும். அதுடன் தேவையான அளவு நிதிபெற வாய்ப்பும் அதிகரித்திருக்கும் என்று கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இனவெறிச் செயல்கள் கொழும்பில் நடைபெற்றிருந்தால் தமிழ்மக்களே கூடுதலாகப் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்றும் எதிர்பார்த்தபடி குழப்பம் ஏற்பட்டிருந்தால் 1983ம் ஆண்டு இனக்கலவரத்தின் பத்து ஆண்டுகள் நிறைவு சம்பவமாக இருந்திருக்கும் என்றும் மேற்கு நாடுகளின் தொடர்புச் சாதனங்கள் இச்செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருக்கும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவினதும், ஜனநாயக ஐ. தே. முன்னணியின் தலைவர் லலித் அத்துலத் முதலியினதும் படுகொலைகள் இந்நாட்டில் ஸ்திரமற்ற நிலையை உருவாக்க மேற்கொள்ளப்பட்ட சதியை அம்பலப்படுத்துகிறது என்று தேசிய பந்தோபஸ்து ஏற்பாடுகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இரண்டு கொலைகளிலும் ஒரேவிதமான சான்று அடையாளங்கள் காணப்படுகின்றன. இந்தக் கொலைகளின் விளைவாக கொழும்பில் வன்செயல்கள் வெடித்திருப்பின் எல். ரி. ரி. ஈ. யே பயன் அடைந்திருக்கும் என்றும் அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (ரி)

பாட்டாளி மக்கள் கட்சியை தடைசெய்ய நடவடிக்கை

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சியை தடைசெய்வது பற்றி தமிழக அரசினால் வெள்ளை அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழக சட்டப்பேரவையில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க பாட்டாளி மக்கள் கட்சியின் மீது தடைவிதிக்கும்படி மத்திய அரசை வற்புறுத்தும் வகையில் இந்த அறிக்கை தயாராகிறது.

மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையில் நடந்த கடிதப்போக்குவரத்து பாட்டாளி மக்கள் கட்சி பற்றிய போட்டோ உள்ளிட்ட ஆதாரங்கள், அது நடத்திய ஊர்வலம், ஊர்வலத்தில் ராஜீவ் காந்தி கொலையாளிகளுக்குச் சூட்டப்பட்ட புகழாரம் முதலியவை அந்த வெள்ளை அறிக்கையில் இடம்பெறும் எனத் தெரியவருகிறது. (ரி)

'நிமிர்வு' வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அகிலா பசுபதி (தூயவள்) யின் 'நிமிர்வு' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று மாலை 4.00 மணியளவில் செல்வி யூடி தலைமையில் கல்வியங்காடு இளங்கலைஞர் மன்றக் கட்டிடத்தில் நடைபெறவுள்ளது.

வெளியீட்டுரையை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க மூத்த உறுப்பினர் ஆ. தேவர் அண்ணாவும், மதிப்புரையை ஆதிலட்சுமி சிவகுமார், சுதாமதி, பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (ரி)

500 சிறைக் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு, விடுதலை

(கொழும்பு)

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக திரு டிங்கிரி பண்டா விஜேதுங்கா தெரிவு செய்யப்பட்டதை யொட்டி 500 சிறைக் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

ஏனைய சிறைக்கைதிகளுக்கு தண்டனைகள் குறைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளின் தண்டனை ஆயுட்கால தண்டனையாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரி)

உல்லாசப் பயணிகள் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்துள்ள உல்லாச பயணிகளின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்துள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் 3,700 உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுவீடன் நாட்டிலிருந்தே கூடுதலான உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர், ஜெர்மன், இங்கிலாந்து, இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்தும் பெருந்தொகையான உல்லாசப் பயணிகள் வருகைதருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

மட்டு. மாவட்டத்தில்

எழுபதினாயிரம் அகதிகள் மீளக்குடியமர்த்த திட்டம்

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும், நண்பர்கள் உறவினர் வீடுகளிலும் தங்கியிருக்கும் 15,905 குடும்பங்களைச் சேர்ந்த 70,830 பேரையும் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த துரித செயற்திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இத்திட்டம் இம்மாதம் 15ம் திகதி முதல் செயற்படுத்தப் படவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (ரி)

நெருப்புக்காய்ச்சல்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கூறப்படுகிறது.

மானிப்பாய், கோப்பாய், கைதடிபோன்ற பகுதிகளில் கூடுதலான மக்கள் நெருப்புக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வைத்திய சிகிச்சை பெற்றுள்ளனர். (109-ரி)

வெளிச்சம் வெளிவந்துவிட்டது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான ""வெளிச்சம்'' வைகாசி மாத இதழ் வெளிவந்துள்ளது. இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய ''கல்வி வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொடுக்கிறது'' என்ற செய்தி இடம்பெறுகிறது.

கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் 'நலம் நலம் அறிய ஆவல்' என்ற கவிதையும், முருகு இரத்தினத்தின் கவிதையும், கே. ஆர். டேவிட், ஆதிகுடியான் ஆகியோரின் இரண்டு சிறுகதைகளும் சோ பத்மநாதனின் மொழிபெயர்ப்பில் 'வழிகாட்டி'' என்ற சிறுகதையும் இந்த இதழிலுள்ளன.

சொக்கன் எழுதும் தொடர் கட்டுரையுடன், நா. யோகேந்திரநாதனின் கட்டுரையும் இடம்பெறுகின்றன. கவிஞர் காசி ஆனந்தனின் 'காசி ஆனந்தன் கவிதைகள்' நூலின் மதிப்புரையை நாக. பத்மநாதனும், அடேல் ஆன் அவர்களின் 'விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள்' ஆங்கில நூலின் மதிப்புரையை நம்பி யாரூரரும் எழுதியுள்ளனர். இவற்றுடன் போராளிகளின் பேனாவிலிருந்து என்ற பகுதியில் சுதாமதி, உதயன் ஆகியோரின் இரண்டு கவிதைகளையும் தாங்கி வெளிச்சம் 14-வது இதழ் வெளிவந்தின்ளது குறிப்பிடத்தக்கது. (ரி)

அப்பியாசக் கொப்பிகள் விநியோகம்

(திருநெல்வேலி)

பாடசாலைகளுக்கு வெண்கட்டிப் பெட்டிகளும், அப்பியாசக் கொப்பிகளும் விநியோகிக்கப்படுகின்றன.

கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட அப்பியாசக் கொப்பிகள் நியாய விலையில் கோட்டக் கல்வி அலுவலகங்கள் ஊடாக பாடசாலைகளுக்கு வழங்கப்பட உள்ளன

இவற்றுடன் இலவசமாக வெண்கட்டிப் பெட்டிகளும் விநியோகிக்கப்படுகின்றன. தற்போது வெண்கட்டிப் பெட்டிகள் யாழ்ப்பாணத்தில் இல்லை என்பதும் இதனால் பாடசாலைகளில் இவற்றுக்கு தட்டுப்பாடு நிலவியதும் குறிப்பிடத்தக்கது. (157-இ)

நீர்கொழும்பில்

தமிழ் இளைஞரை தேடி பொலிஸ் வலை விரிப்பு

(கொழும்பு)

நீர்கொழும்பு பொலிஸ் பகுதி தடுப்பு முகாமிலிருந்து தப்பிச் சென்ற புலிகள் இயக்கச் சந்தேக நபர் ஒருவரைத் தேடி பொலிசார் வலை விரித்துள்ளனர்.

வடமராட்சி கரவெட்டியைச் சேர்ந்த சிவக்கொழுந்து அழகன் என்ற இந்த இளைஞர் அண்மையில் நீர்கொழும்புப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர் என்று பொலிசார் தெரிவித்தனர். (ரி)

எட்டு இலங்கையரும் 9 கடத்தல்காரரும் கைது

(சென்னை)

நாகபட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் இலங்கையைச்சேர்ந்த எட்டுப்பேரும் ஒன்பது கடத்தல்காரர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

கைதான இவர்களிடமிருந்து 13 லட்சம் பெறுமதியுள்ள டீசல், பெற்றோல், ஆட்டோ உதிரிப்பாகங்கள் கைப்பற்றப்பட்டன'

சென்ற ஒருவார காலத்தில் கடலோர மாவட்டங்களில் காவல்துறையினர் மேற்கொண்ட பல்வேறு சோதனைகளின் போது இவர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்கதவால் நுழைய முயற்சி

(கொழும்பு)

ஜனநாயக ஐ. தே. முன்னணியினர் பின் கதவால் ஐ. தே. கட்சிக்குள் நுழைந்து கொள்ள முனைகிறார்கள் என்று ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

மாகாணசபைத் தேர்தல்களில் தோல்வியை எதிர்நோக்கி விரக்தி அடைந்திருக்கும் தலைமையற்ற ஜ. ஐ. தே. முன்னணியினர் ஐ. தே க. விற்குள் புகுந்து கொள்ள முயற்சி செய்து வருகிறார்கள். (ரி)

ஊழியர் நம்பிக்கை நிதியம் 700 கோடியாக அதிகரிப்பு

(கொழும்பு)

ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பெறுமதி 700 கோடி ரூபாவை தாண்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு புள்ளிவிபரங்களுடன் ஒப்பிடுகையில் இது கணிசமான அளவு முன்னேற்றமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந் நிதியத்தின் அங்கத்தவர்கள் தொகையும் 18 லட்சமாக அதிகரித்துள்ளது.

திறைசேரி உண்டியல்கள், வங்கியில் நிலையான வைப்புகள் ஆகியவற்றிலும் வீடமைப்பு அதிகாரசபை அரசாங்க முதலீட்டு வங்கி ஆகியவற்றிலும் முதலீடுசெய்ததன் மூலம் ஊழியர் நம்பிக்கை நிதியம் நூறு கோடி ரூபாவுக்கும் மேலான தொகையைச் சம்பாதித்துள்ளது.

கடந்த ஆண்டு ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு 13 வீத வட்டியும் வழங்கப்பட்டுள்ளது. (ரி

தமிழக அரசை கலைப்பதற்கு மத்திய புலனாய்வுதுறை சதி!

அ. தி. மு. க. குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழக முதலமைச்சர் மீது அபாண்டமான பழிசுமத்தி அ. தி. மு. க. அரசை கலைப்பதற்கான முகாந்திரங்களை ஏற்படுத்த மத்திய புலனாய்வுத்துறை சிறையிலுள்ள விடுதலைப்புலிகளிடமிருந்து பொய்யான வாக்கு மூலங்களைத் தயாரித்து அதில் கையெழுத்திடச்சொல்லி வற்புறுத்தி வருவதாக அ. தி. மு. க. குற்றம்சாட்டியிருக்கிறது.

தமிழக காவல்துறையின் சில அதிகாரிகளும் மத்திய அரசின் இந்த தீய நோக்கத்திற்கு உறுதுணையாக இருப்பது முதல்வருக்கு தெரியாமல் இல்லை என்று அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் தெரிவித்துள்ளார். (ரி)

காஞ்சிபுரம் சிறையிலிருந்து 5 தமிழர் தப்பியோட்டம்

(சென்னை)

காஞ்சிபுரம் சிறைச்சாலையில் தனி முகாமில் காவலில் வைக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழர்களில் ஐந்து பேர் நேற்று முன்தினம் தப்பிச் சென்று விட்டார்கள். இவர்கள் ஒவ்வொருவராக பின்புறம் மதில் சுவர் மீது ஏறிக்குதித்து தப்பியோடியதாக தெரிகிறது என்று அறிவிக்கப்பட்டது.

தமிழகத்தில் பதிவு செய்யாமலிருந்த இலங்கைத் தமிழர்கள் இந்த தனி முகாமில் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த முகாமில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (பி-சி)

அகதி முகாமிலிருந்து இருவர் தப்பியோட்டம்

(சென்னை)

மதுரை மாவட்டம் வேலூர் தனி அகதிகள் முகாமிலிருந்து நேற்று அதிகாலை சந்திரன், யோகராஜன் என்ற ராஜு ஆகிய இரண்டு இலங்கை அகதிகள் சுவரேறிக் குதித்துத் தப்பிவிட்டனர்.

இவர்கள் இருவரும் முறையான பாஸ்போர்ட் இல்லாததால் மண்டபம் மற்றும் இராமநாதபுரத்திலிருக்கும் தனி முகாம்களில் ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்கள் என காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-சி)

மீட்பு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 12-ம் திகதி புதன்கிழமை நல்லூர் மங்கையற்கரசி மகா வித்தியாலயத்தில் மாலை 3 மணி தொடக்கம் 4 மணி வரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை காலமும் மீட்பு நிதிக்கடனைச் செலுத்தத் தவறியோர் இக் குறித்த நாளில் தமது மீட்பு நிதிக்கடனைச் செலுத்த முடியும். (சி)

ஓய்வூதியர்களுக்கு 260 ரூபா அதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்க உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கும் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 260 ரூபா விசேட வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்படும் என அரசு நேற்று அறிவித்தது.

இந்த விசேட வாழ்க்கைச் செலவுப்படி ஏற்கனவே அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது. எனினும் ஓய்வூதியர்களுக்கு இந்த வாழ்க்கைச் செலவுப்படி இதுவரை வழங்கப்படவில்லை.

ஜனாதிபதியாக பதவியேற்றதைக்குறிக்குமுகமாக திரு. டி. பி. விஜேதுங்க பொதுமக்களுக்கு வழங்கிய நிவாரணங்களில் ஒன்றாக இந்த விசேட வாழ்க்கைச் செலவுப்படி ஓய்வூதியர்களுக்கு கொடுக்கப்படுவதாக அரசு அறிவித்தது.

பாதுகாப்பு செலவுக்காக 2000 கோடி ரூபா செலவு செய்யப்படுவதால் மேற்படி வாழ்க்கைச் செலவுப்படிக்கான நிலுவையை வழங்க முடியாதிருப்பதாகவும் அரசு மேலும் அறிவித்தது. (இ-சி)

இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழோசை சஞ்சிகையின் முதலாவது இதழ் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் கம்பர் மலை பாரதி சனசமூக நிலைய முன்றலில் இடம்பெறவுள்ளது.

பொன். சந்திரலிங்கம் தலைமையில் நடைபெறும் மேற்படி வெளியீட்டு விழாவில் உடுப்பிட்டி கொத்தணி அதிபர் நா. அனந்தராஜின் சிறப்புரையும் மற்றும் அறிஞர் பெருமக்களின் ஆய்வுரையும் இடம்பெறவுள்ளது. (க-சி)

எட்டு இல. தமிழர் தமிழகத்தில் கைது

(சென்னை)

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு பொருட்களை கடத்தினதாக இலங்கை தமிழர் எண்மர் உட்பட 17பேர் நாகபட்டினத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 13 லட்சம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாம்.

இதேவேளை புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழக காவல் துறையினரும் கடற்படையினரும். கடலோரப்பகுதியில் பலத்த தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

ஜனாதிபதி, பிரதமர்

ஜே. ஆர். உடன் சந்திப்பு

(கண்டி)

ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவை நேற்றுக் கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து, நாட்டு நிலைமைகள் பற்றிக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின்போது பல நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரசாங்க அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (சு-சி)

தேர்தல் ஒத்திவைப்பிற்கு

தி.மு.க. — அ.தி.மு.க. கண்டனம்

(சென்னை)

பழநி இடைத் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டமையை தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட தி.மு.க தலைவர் மு. கருணாநிதி, பழநி இடைத் தேர்தலை, தேர்தல் கமிஷன் ஒத்திவைத்தது நியாயமற்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலை எதிர்கொள்ளமுடியாத இந்திரா காங்கிரஸ் தேர்தலை ஒத்தி வைக்குமாறு தேர்தல் கமிஷனைத் தூண்டிவிட்டதாக அ. தி. மு. க. துணைப் பொதுச் செயலர் எஸ். டி. சோமசுந்தரம் கூறியுள்ளார். (க-சி)

தற்காலிக ஊழியர்

நிரந்தரமாக்கப்படுவர்

(கொழும்பு)

1992-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் திகதிக்குப் பின்னர் சிற்றூழியர்களாக சமயா சமய அடிப்படையில் அல்லது தற்காலிக அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட அனைவரும் நிரந்தரமாக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க தெரிவித்துள்ளார்.

திணைக்களங்கள், அமைச்சுகள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் சிற்றூழியர்கள் தரங்களில் வெற்றிடம் இருப்பதாலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

எழுதுவினைஞர்கள், மற்றும் அதனோடு சேர்ந்த தரங்களில் உள்ள சேவைகளுக்கு ஆட்களை தேர்ந்தெடுப்பதில் மாற்றங்கள் கொண்டுவரப்படும் எனவும் தெரிவித்தார். (க-சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மே மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, SriLanka under licence Number B/10536/B

கொழும்பில் பொலிஸ், இராணுவம் தொடர்ந்து பாதுகாப்பு!

(கொழும்பு)

கொழும்பு நகரில் ஆயுதம் ஏந்திய பொலிசாரும், இராணுவத்தினரும் தொடர்ந்து காவல் புரிந்து வருகிறார்கள்.

சந்தேகத்திற்கிடமானமுறையில் கூட்டம் கூடுவோர் மீதும் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் வகையில் நடந்துகொள்வோர் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு பொலிசாருக்கும், இராணுவத்தினருக்கும் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நிலைமையை அவதானித்தே கொழும்பு நகரில் மேற்கொள்ளப்பட்டுள்ள விசேஷ பாதுகாப்பு நடவடிக்கைகளை அகற்றுவது பற்றி ஆலோசிக்கப்படுமென்று கூட்டுப்படைத் தலைமை அலுவலக அதிகாரி பிரிகேடியர் அங்கமன தெரிவித்துள்ளார். (ரி-சி)

படகு சேவை கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவையிலீடுபட்டுள்ள படகு உரிமையாளர்கள் அனைவரையும் இன்று திங்கட்கிழமை பி. ப. 2 மணிக்கு கிளாலிப் படகுத்துறைக்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (சி)

படகு மூழ்கி 25 பேர் பலி

(புதுடில்லி)

பீகார் மாவட்டத்தில் நேற்று இடம் பெற்ற படகு விபத்தில் அதில் பயணம் செய்த 25 பேர் கடலில் மூழ்கி விட்டதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இப்படகில் 50 பேர் பயணம் செய்ததாகவும் 25 பேர் நீந்திக்கரை சேர்ந்ததாகவும் 6 பெண்கள் உட்பட 8 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது. (க-சி)

அணைக்கட்டு புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சிப் பகுதியிலே தொடர்ந்து பராமரிப்பின்றி அழிந்துபோகும் நிலையிலே இருந்த புதுமுறிப்புக் குள அணைக்கட்டின் புனரமைப்பு வேலைகள் நீர்ப்பாசனத்திணைக்களத்தின் உதவியுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழக உட்கட்டுமானப் பகுதியின் தேச நிர்மாணிகளால் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குளத்திலிருந்து சுமார் 985 ஏக்கருக்கு நீர்ப்பாசனம் செய்யக் கூடியதாக உள்ளது. அத்தோடு 387 நிரந்தர விவசாயக் குடும்பங்களும் 250 தற்காலிக விவசாயக் குடும்பங்களும் பயனடைந்து வருகின்றன. (ரி)

அம்பாறை—மட்டக்களப்பில் காடுகள் தீப்பற்றின

(அம்பாறை)

அம்பாறை - மட்டக்களப்பு மாவட்டத்தில் கடும் வெப்பம் நிலவுவதால் அங்கு காடுகள் தீப்பற்றி எரிவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் நிலவும் கடும் வெப்பத்தையடுத்து இங்கு அனல் காற்று வீசுவதாகவும் இதனால் இக்காடுகளில் மரங்கள் தீப்பற்றி எரிவதாகவும் கூறப்படுகிறது. (க-சி)

தேர்தலில் வாக்களிக்க கைதிகள் கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒழுங்குகள் செய்துதரப்படவேண்டுமென்று தடுப்பு முகாம்களில் தடுத்து வைத்திருக்கும் கைதிகள் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஜனநாயக வழியில் செல்வதாகவும், மனித உரிமைகள் பற்றிப் பேசும் இந்த அரசாங்கம் தடுப்புக்காவலில் உள்ள இந்தக் கைதிகளின் வாக்களிக்கும் அடிப்படை உரிமையை செய்துதரவேண்டுமென்றும் மேலும் கோரியுள்ளனர். (சு-சி)

கல்லூரி இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் இயங்கிவந்த பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி கடந்த 3-ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் சித்தன்கேணி-சங்கானை பிரதானவீதியிலுள்ள நாவலர் கல்வி நிலைய கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (72)

உற்சவம்

(கிளிநொச்சி)

ஸ்கந்தபுரம் கரும்புஆலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் அண்மையில் நடைபெற்றது.

இவ்விழாவில் கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம குரு மகாசந்நிதானம் தவத்திரு கணேசானந்த மகாதேவா சுவாமிகளின் ஆசியுரையைத் தொடர்ந்து சிவ அன்பன் புலவர் குமாரசாமி, முன்னாள் அதிபர் திரு. சிதம்பரப்பிள்ளை, திரு. இராமநாதன் ஆகியோரும் உரையாற்றினார்கள். (83)

ஷெல் தாக்கு

(எழுதுமட்டுவாள்)

கிளாலி கடலோரப்பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை ஷெல் தாக்குதல் இடம் பெற்றது. இதேவேளை புலிகளுக்கும் கடற்படையினருக்குமிடையில் மோதல்கள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (170-சி)

வெளிவாரி கலை முதல் தெரிவு பரீட்சை முடிவு

(யாழ்ப்பாணம்)

பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி கலை முதற் தெரிவு 1992 பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

பரீட்சை பெறுபேறுகள் அந்தந்த பரீட்சாத்திகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இருவருக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

மேற்படி நபர்கள் இருவர் மீதும் கடந்த வருடம் ஜனவரி 6ம் திகதி தாவடியைச் சேர்ந்த நவரட்ணராசா சுதர்சன் என்பவரை கொலை செய்தமை தொடர்பாக நீண்ட நாட்களாக விசாரணை நடைபெற்றதும் தெரிந்ததே. (க-சி)